**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 1.11.2012**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்திய நாடு, சுதந்திரம் அடைந்த பிறகு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, **1952**–ஆம் ஆண்டு, அமைக்கப் பெற்ற, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, இந்த ஆண்டு, **60** ஆண்டுகளை, நிறைவு செய்துள்ளதை அடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், வைர விழா, சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில், 30.11.2012 அன்று, வெகு விமரிசையாக நடைபெற உள்ளது.

30.11.2012 அன்று நடைபெறவுள்ள, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், வைர விழாவில், தலைமை விருந்தினராக, கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர், திரு. பிரணாப் முகர்ஜி அவர்களை, அழைக்கும் பொருட்டு, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர், **26.10.2012** அன்று, புது டெல்லியில் உள்ள, குடியரசுத் தலைவர் மாளிகையில், அவரை நேரில் சந்தித்து, எனது அழைப்புக் கடிதத்தை வழங்கி, அழைப்பு விடுத்தனர்.

எனது அழைப்பினை ஏற்றுக் கொண்டு, 30.11.2012 அன்று நடைபெறவுள்ள, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், வைர விழாவில் கலந்து கொள்ள, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், **29.10.2012** தேதியிட்ட கடிதம் மூலம், இசைவு தெரிவித்துள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், வைர விழாவிற்கு, தலைமை தாங்குமாறு, மேதகு தமிழ்நாடு ஆளுநர், டாக்டர் கே. ரோசைய்யா அவர்களை, இன்று ஆளுநர் மாளிகைக்கு சென்று, நேரில் நான் அழைப்பு விடுத்தேன். எனது அழைப்பினை ஏற்று, மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், இந்த விழாவிற்கு தலைமை தாங்க, தனது இசைவினைத் தெரிவித்தார்கள் என்பதை, இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவிலே கலந்து கொண்டு, சிறப்பிக்குமாறு, இந்த மாமன்றத்தின், உறுப்பினர்கள் அனைவரையும், தங்கள் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

*******